பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 27 | வெள்ளிக்கிழமை | 10.05.2024 | அதிர்வு 283

## மீண்டும் எம்.பியாக இன்று பதவியேற்கின்றார் முஜிபுர்

### வெளியானது வர்த்தமானி அறிவித்தல்



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளு 06▸

# ஐ.நா. பிரதிநிதிகள் அநுரவுடன் சந்திப்பு

## முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சு



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - ஆன்ட்ரே பிராஞ்ஸ்க்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி.க்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ம.வி.மு. தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. 06▸

# என் அரசியல் பயணம் இத்துடன் நிற்காது! மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வருவேன்!!

## எம்.பி. பதவி இழந்த டயனா இப்படி சூளுரை

“எனது அரசியல் பயணம் இத்துடன் நிற்காது. வெகு காலத்துக்குள் இந்தநாடாளுமன்றம் கலைக்கப்படும். நான் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வருவேன்”

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த டயனா கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று டயனா கமகே விசேட ஊடகவியலாளர் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:-

“நான் எப்போதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பேன். ரணில் விக்கிரமசிங்க மற்றவர்கள் மறைந்திருந்த போது இந்த நாட்டைக் கைப்பற்றினார்.” – என்றார்.



# வியாஸ்காந்த் பல சாதனைகளை இன்னும் நிலைநாட்ட வேண்டும்!

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் வாழ்த்து







வியாஸ்காந்த் தனது கிரிக்கெட் பயணத்தில் இன்னும் பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்று வடக்கு மாகாண 06▸





டயானா கமகே எம்.பியின் பதவி நீக்கத்தை ஒட்டிய தீர்ப்பில் உயர் நீதிமன்றம் சில சாட்டையடிகளை நாசூக்காக வைத்திருக்கின்றது. அதனால் இது போன்ற விடயங்களில் இனிமேல் குற்றச்சாட்டுகள், முறைப்பாடுகள், புகார்கள் வந்தால் விட்டேத்தியாக – பொறுப்பைத் தட்டிக் கழித்து – காலத்தை இழுத்தடித்து – அதிகாரிகள் நடந்து கொள்வது சாத்தியமாகாது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் இந்தத் தீர்ப்பால் நமது அரசியல்வாதிகள் சிலருக்கு ‘திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையாக’ நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும் சில வட்டாரங்களில் குசு குசுக்கப்படுகிறது.

அதில் இருவர் தமிழர்கள். 06▸

# கூலிப்படைகள் தொழிலாளரைத் தாக்குகின்றன; தொழிலாளர் சம்பளம் தொடர்பில் அரசு தோல்வி!

## சபையில் தொழிலமைச்சர் மனுஷவை இடைமறித்து மனோ கணேசன் எம்.பி. காட்டம்

“தோட்டக் கம்பனிகள் கூலிப்படைகள் அமைத்து தொழிலாளர்களை தாக்குகின்றன. இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்களை கொண்டு கம்பனிக் கூலிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இரத்தினபுரி, இங்கிரிய, தும்பற தோட்டத்தில் நேற்று முதல் நாள், கம்பனிகாரர்களால் தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸ் நடவடிக்கை எடுக்கும்படி கிரியல்ல பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த பெரேராவுக்குப் பணித்துள்ளேன். நான் கடுமையாக தலையிடும் வரை பொலிஸ் அசமந்தமாக இருந்தது. தாக்குதல் நடத்தியவர்களை இரண்டு நாள்கள் தேடிய பொலிஸ் தற்போது அவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

“மறுபுறம், தோட்ட தொழிலாளர் சம்பளம் தொடர்பில் இந்த அரசு இந்த நிமிஷம் வரை தோல்வி அடைந்து உள்ளது. நீங்களும், ஜனாதிபதியும் உங்கள் வர்த்தமானி ஆவணக் கடதாசியை தூக்கி காட்டி, கொட்டகலையில் ‘இதோ ரூ.1700/=’ என்று சூளுரைத்தீர்கள். ஆனால், என்ன ஆனது? நீங்கள் சூளுரைத்து வாயை மூட முன் இங்கே கொழும்பில், கம்பனிகாரர்கள் ‘முடியவே முடியாது’ என்று கூறி நீதிமன்றத்துக்கு போகிறார்கள். கடந்த 5 வருடங்களாக ‘இதோ, அதோ, சம்பளம் உயர்வு கிடைக்கிறது’ என்று சொல்லி, இது இழுபட்டது. இனியும் இழுபடதான் போகிறது.

“தோட்டத்துறையில் ‘சிஸ்டம் சேஞ்ச்’ என்ற முறை மாற்றம் செய்யாமல்



அங்கே நிரந்தர தீர்வு ஒருபோதும் காண முடியாது. தோட்டங்களில் தினக்கூலி முறை ஒழிக்கப்பட வேண்டும்.”

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கூறினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தொழில் அமைச்சு விவாதத்தில் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார உரை நிகழ்த்தி கொண்டிருக்கும் போது அவரை இடை மறித்து உரை நிகழ்த்திய மனோ கணேசன் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

தொழிலாளர் மீதான தாக்குதல் நடத்த கம்பனிகள் சுயேச்சை ஓய்வு திட்டத்தில் இராணுவத்தில் இருந்து வெளியேறும் முன்னாள் படை வீரர்களை கொண்டு கூலிபடைகளை அமைத்துள்ளார்கள். அந்த கூலிப்படைகள் தொழிலாளர்களின் மீது வன்முறை பிரயோகம் செய்து தாக்குகின்றன. இரத்தினபுரி இங்கிரிய தும்பரை தோட்டம், கிரியெல்ல பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் நேற்று முதல் நாள் நடந்துள்ளது.

இது பற்றி எங்கள் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட பிரதான அமைப்பாளர் சந்திரகுமார் எனது கவனத்துக்கு நேற்றுக் கொண்டு வந்தார். உடனடியாக நான் கிரியல்ல பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த பெரேராவுக்கு கடுமையாக இதுபற்றி பணிப்புரை விடுத்தேன். அதுவரை அசமந்தமாக இருந்த பொலிஸ் அதன் பின் தாக்குதல் நடத்திய நபர்களை தேடத் தொடங்கியது.

இந்த விடயத்தில் நான் தலையிட்ட பிறகு, சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களின் முகவர்கள் மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ள – தாக்குதலுக்கு உள்ளான – தொழிலாளிப் பெண்ணைத் தொடர்பு கொண்டு வழக்கை வாபஸ் வாங்கும்படி வலியுறுத்தி உள்ளார்கள். நான் தொடர்ந்து நடவடிக்கை எடுத்த காரணத்தால் தற்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகி உள்ளார்கள்.

இது தொடர்ந்து நடக்கிறது. கூலிப் படைகளை வைத்து தாக்குதல்கள் மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் ஆங்காங்கே நடக்கின்றன. ஒருபுறம் உரிய சம்பளம் இல்லை. மறுபுறம் வன்முறை. இது என்ன? அரசாங்கம் மலையக பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் தோல்வி அடைந்துள்ளது. – என்றார்.

# இலங்கைத் தேசிய பெண்கள் கபடி அணிக்கு யாழ்ப்பாண வீராங்கனைகள் இருவர் தெரிவு!

## நேபாளத்தில் தெற்காசியப் போட்டியில் கலந்து கொள்வர்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கைத் தேசிய பெண்கள் கபடி அணி தெரிவில் யாழ்ப்பாண மாவட்டக் கபடிச் சங்கத்தைச் சேர்ந்த வீராங்கனைகளான இ.பிரியவர்ணா, வி.டிலக்ஷனா ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

நேபாளத்தில் நடைபெறவுள்ள தெற்காசிய பெண்களுக்கான கபடி போட்டியில் விளையாடுவதற்கு இவர்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என இலங்கைத் தேசிய கபடி சம் மேளனம் அறிவித்துள்ளது.





# கரையிலிருந்து 10 மீற்றருக்கும் அதிக பிரதேசத்தை மன்னாரில் ஆண்டு தோறும் கடலரித்து விழுங்குகிறது

## கொண்டச்சிக்குடாவில் கடற்படையின் காவலரணே கபளீகரம்

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் ஆண்டுதோறும் கரையிலிருந்து 10 மீற்றருக்கும் அதிக பிரதேசம் கடல் அரிப்பினால் அள்ளுண்டு செல்வதனால், அப்பகுதியில் பெரும் ஆபத்தை எதிர்கொள வதாக மீனவர்களும் ஏனையோரும் தெரிவிக்கின்றனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள கடற்படையின ரின் காவலரண் ஒன்று கடல் அரிப்பின் காரணமாக கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறை கொண்டச்சிக்குடாவில் அமைந் திருந்த கடற்படை காவலரணே இவ்வாறு கடல் அரிப்பின் காரணமாக கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

கடலில் இருந்து சுமார் 10 மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த காவலரண், அதன் அருகே இருந்த தனியார் இறங்குதுறை ஆகிய பகுதிகளிலேயே நேற்று முன்தினம் இவ்வாறு கடல் அரிப்பு ஏறபட்டுள்ளது.

இப் பகுதியில் ஆண்டு ஒன்றிற்கு 10 மீற்றருக்கும் அதிக பிரதேசம் என்ற வகையில் கடல் அரிப்பிற்கு இலக்காகி வருவத னால் கடற்றொழிலாளர்கள், அயல் கிராம மக்கள் ஆகி யோர் பெரிதும் பாதிப்பினை எதிர்கொண்டு வருகின்றனர்.

தொடரும் கடல் அரிப்பின் காரணமாக ஏற்படும் பாதிப்புக் கள் மற்றும் அதனைத் தடுக்கும் வழி வகைகளுடன் மாவட்ட வரைபடத்தில் மாற்றம் ஏறபடுகின்றதா எனபன தொடர்பில் ஆராய உரிய திணைக்களங்கள் ஊடாக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என மாவட்ட அரச அதிபர் தெரிவித் தார்.










# தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்டமூலம் இன்று சபையில்

## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தகவல்



28 வருடங்களின் பின்னர் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான திருத்தப்பட்ட சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"டிஜிட்டல் வியூகத் திட்டம் – 2030 க்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. அதில் 06 முக்கிய விடயங்களை முன்வைத்துள்ளோம். அதில் முதலாவது உட்கட்டமைப்பு வசதிகள், இணைப்பு மற்றும் அணுகல், திறன்கள், கல்வியறிவு, கைத்தொழில்கள் மற்றும் தொழிற்துறை, இணைக்கப்பட்ட டிஜிட்டல் அரசாங்கம். (connected Digital Government) மேலும், சைபர் பாதுகாப்பு, தரவுப் பாதுகாப்பு, தனித்தன்மை, டிஜிட்டல் நிதிச் சேவைகள், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைகளின் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றை சுட்டிக்காட்டலாம். வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுடன் இணைந்து ஜூன் 25ஆம் திகதி உலகளாவிய முதலீட்டு ஊக்குவிப்பு மாநாடு நடத்தப்பட உள்ளது.

மேலும், பாடசாலைகளுக்கு 1000 ஸ்மார்ட் வகுப்பறைகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன், தகவல் தொழில்நுட்பம் அல்லாத பட்டதாரிகள் மற்றும் NVQ 4 தகுதி பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், 28 வருடங்களுக்குப் பின்னர், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான திருத்தச் சட்டமூலம் நாளை (இன்று) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கு முன்னர் கடலுக்கு கீழ் பயன்படுத்தப்படும் கேபிள் இணைப்புகளுக்கு சட்டவிதிகள் இருக்கவில்லை. அதற்கான சட்டவிதிகளை இந்த சட்ட மூலத்தின் மூலம் சமர்ப்பிக்க முடிந்துள்ளது.

அனைத்துவிதமானசமூகவலைத்தளபயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை 60 மில்லியனிலிருந்து 74 மில்லியனாக அதிகரித்துள்ளது. எனவே தேசிய சைபர் பாதுகாப்பு சட்டம் அவசியப்படுகின்றது. அதன்படி, இந்த சட்டத்தை இம்மாதம் வரைய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், SL CERT நிறுவனத்துடன் இணைந்து 29 அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் சைபர் பாதுகாப்பை அதிகரிக்கத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக 05 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக பின்னவல மற்றும் கிதுல்கல சுற்றுலா கொரிடோவை அபிவிருத்தி செய்வதற்கு 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது."
– என்றார்.

# கந்தர்மடம் மணல்தறை வீதிப் பகுதியில் வீடு ஒன்று பொலிஸாரினால் முற்றுகை!

## இரண்டு பெண்கள், இரண்டு ஆண்கள் கைது





யாழ்ப்பாணம் – கந்தர்மடம் மணல்தறை வீதிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வீடொன்றை முற்றுகையிட்டு வீட்டு உரிமையாளர், இரண்டு பெண்கள் மற்றொரு ஆண் என நால்வரொ பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த தலைமையிலான யாழ்.மாவட்ட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சில நாள்களாக இந்த வீட்டில் அதிக பெண்கள் மற்றும் ஆண்கள் வந்து போகின்றனர் எனப் பொலிஸ் புலனாய்வாளர்களுக்கு அந்தப் பகுதி ஊர்மக்களினால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்றையதினம் வீட்டை முற்றுகையிட்ட வேளை இரு பெண்களையும் ஆண் ஒருவரையும் மற்றும் வீட்டின் உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை மற்றொருவர் மதில் பாய்ந்து தப்பி சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். தப்பிச் சென்றவருடையது எனஜ் கருதப்படும் கைத்தொலைபேசியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறன்றனர்.

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 2 பொலிஸ் அதிகாரிகள் கைது!

கொட்டாவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு அதிகாரிகள் உட்பட மூவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு வால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டாவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருமே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.




# தனக்குத் தானே தீ மூட்டி யுவதி ஒருவர் உயிரிழப்பு



யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறை சிறி முருகன் குடியேற் றம் பகுதியில் யுவதி ஒருவர் தனக்கு தானே தீ வைத்து எரிந்து சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

மேற்படி யுவதி மன அழுத்தம் காரணமாக திடீரென விபரீத முடிவு எடுத்து தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டு உயிரிழந் தார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் வல்வெட்டித்துறை ஸ்ரீ முருகன் குடியேற் றம் பகுதியைச் சேர்ந்த அன்ரன் மரியதாஸ் கிருபாகினி என்ற வயது 26 யுவதியே உயிரிழந்தார்.

சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித் துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பரீட்சை நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்து மாணவன் மீது தாக்குதல்!

## இருவர் பொலிஸாரால் கைது

ரத்கம பிரதேசத்தில் பரீட்சை நிலையத்துக்குள் அத்து மீறி நுழைந்து அங்கிருந்த மாணவன் ஒருவரைத் தாக்கி னர் எனக் கூறப்படும் இருவர் ரத்கம பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரத்கம, தெவினிகொட பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன் மீதே ரத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 17 மற்றும் 16 வயதுடைய இருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

மேற்படி மாணவன் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த போதிலும் தொடர்ந்து பரீட்சை எழுதினார் என்று ரத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

# பருத்தித்துறையில் இலவசமாக யோகாசன பயிற்சி வகுப்புகள்



யாழ். பருத்தித்துறையில் இலவச யோகாசன வகுப்புகள் இடம்பெறுகின்றன.

யோகாசன ஆசிரியர் மா. இரத்தினசோதியால் நடத் தப்படும் இந்த வகுப்புகள் சனி, ஞாயிற்று மற்றும் செவ்வாய் கிழமைகளில் இடம்பெறுகின்றன.

சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் காலை 6.30 தொடக்கம் 8.00 மணி வரை தும்பளை அஞ்சலியகத்தில் யோகா வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

செவ்வாய் கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு ஓடக் கரை, ஞானாலயத்தில் வகுப்புக்கள் இடம்பெறுகின் றன.

இந்த இலவச யோகாசன வகுப்புக்களில் வயது வேறுபாடு இன்றி அனைவரும் பங்கேற்க முடியும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் கனடாவில் இருந்து வந்து குதித்தவர். இன்னும் வெளியே தெரியாமல் கனடா பிரஜாவுரிமையைப் பேணுகின்றார் என்று கேள்வி. சட்டபூர்வமான ஆதாரங்களை வெளி ஆள்களினால் கனடா அரசிடமிருந்து பெற முடியாது என்ற தைரியத்தில் இவ்வளவு காலமும் காலத்தை ஓட்டி விட்டார் அவர் என்று கேள்வி. இனியும் அது தாக்குப் பிடிக்குமா என்பது தெரியவில்லை.

அடுத்தவர் நேரடியாக திடீரென லண்டனில் இருந்து வந்து குதித்தவர்.

மலிந்தால் விடயம் சந்திக்கு – சந்தைக்கு – வரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

\+ \+ \+

ஜனாதிபதித் தேர்தல் வரும் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை தேர்தல்கள் ஆணைக் குழு விசேட அறிவிப்பாக நேற்று திடுதிப்பென வெளியிட்டிருக்கின்றது.

அரசமைப்பின்படி, இதுதான் – இந்த தினங்களுக்கு இடையில்தான் – ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற ஒழுங்கு இருப்பது அரசமைப்பைப் புரிந்த எல்லோருக்கும் ஏற்கனவே தெரியும். ஆணைக்குழு நேற்று அதை அறிவித்துத்தான் மக்களுக்கு இவ்விடயம் புதிதாகத் தெரிய வேண்டும் என்பது அல்ல.

இப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டிய கால எல்லை குறித்து நேரத்துடன் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் என்ற சட்டக் கடப்பாடு – பொறுப்பு – ஏதும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடையாது.

அரசமைப்பு ஏற்பாடுகளின்படி –

வரும் ஜுலை மாதம் அளவில், ஜனாதிபதி தேர்தல் திகதி, வேட்பு மனு ஏற்புத் திகதி ஆகியவற்றை தேர்தல் ஆனைக் குழு அறிவித்தால் போதும்.

அப்படி இருக்க, ஜனாதிபதித் தேர்தல் என்ன காலத்துக்குள் நடத்தப்பட வேண்டும் என்ற ஒரு திடீர் அறிவிப்பை ஆணைக் குழு வெளியிட்டிருக்கின்றது. அப்படி வெளியிட்டமை ஒன்றும் சட்டத்தவறு அல்ல. ஆயினும், தனக்கு பணிக்கப்படாத ஒரு விடயத்தை தன்பாட்டிலேயே தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்திருப்பதில் ஏதேனும் சூத்திரம் பொதிந்திருக்கும் என்று ஊகிக்கப்படுகின்றது.

'இப்படி ஒரு பெரிய தேர்தலுக்கு நாங்கள் தயாராகிறோம், அதை முற்கூட்டியே அறிவித்து விட்டோம், அதற்குள் பொதுத் தேர்தல் போன்ற ஒன்றையும் சேர்த்து நடத்தும் இக்கட்டை எங்களுக்குத் தந்து விடாதீர்கள்!' என்பது போன்ற தகவலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சூசகமாகச் சொல்லும் செய்திதான் இந்த அறிவித்தலோ தெரியவில்லை.

கொஞ்ச நாள் செல்ல விடயம் தெளிவாகும். அப்போது பார்க்கலாம்.

# விபத்தில் யுவதி காயம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் இந்திரராஜா சிந்துஜா (வயது- 27) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முற்பகல் பருத்தித்துறை – மருதங்கேணி வீதியில் குடத்தனை வலிக்கண்டிப் பகுதியல் இடம்பெற்ற இவ் விபத்தில் 27 வயதான யுவதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

## ஐ.நா. பிரதிநிதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசகர் பெட்ரிக் மெகார்த்தி, சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான பகுப்பாய்வாளர் நெத்மினி மெதவல மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் எம்.பியும் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்படி சந்திப்பின்போது இலங்கையின் நடப்பு மனித உரிமைகளின் நிலைமை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயன்முறை பற்றி இரு தரப்புக்கும் இடையில் விரிவாகக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

குறிப்பாக இலங்கையில் நல்லிணக்க செயன்முறையை உன்னிப்பாக அவதானிப்பதாகச் சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் எதிர்வரும் தேர்தல் செயன்முறைக்குள் அரசியல் கட்சிகளால் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தினர்.

இதன்போது தமது அரசியல் கலாசாரமானது தொடக்கத்தில் இருந்தே ஒழுக்க நெறிக் கோவையை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பதை வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளுக்குத் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் தெரிவித்தது.

## மீண்டும் எம்.பியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்றம் வந்த டயனா கமகேவின் எம்.பி. பதவி நீக்கப்பட்டதன் காரணமாக வெற்றிடமாகியுள்ள அந்தப் பதவிக்கு முஜிபுர் ரஹ்மானை நியமித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

டயனா கமகே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க சட்ட ரீதியாக தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், அவரின் வெற்றிடத்துக்கு முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மானின் பெயர் முன்மொழியப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார்.

அதன்படி, முஜிபுர்ரஹ்மானைநாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகர் முன்னிலையில் முஜிபுர் ரஹ்மான் எம்.பியாகப் பதவியேற்கவுள்ளார்.

## வியாஸ்காந்த்...

(முதலாம் பக்ககத் தொடர்ச்சி...)

ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இந்தியன் ப்ரீமியர் லீக் (IPL) கிரிக்கெட்சுற்றுப்போட்டியில்சன்ரைசஸ்ஹைதராபாத் அணிக்காக விளையாடியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்துக்கு வடக்கு மாகாணம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வடக்கு மாகாணத்திலிருந்து தனது கிரிக்கெட் பயிற்சியைப் பெற்ற இவர் இலங்கைக்குப் பெருமிதத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன் யாழ். மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பல்வேறுபட்ட சமூகச் சீர்கேடான செயற்பாடுகளில் கவனம் செலுத்தும் இளைய தலைமுறையினருக்கு விளையாட்டின் மூலம் சாதனை படைக்கும் 22 வயதேயான வியாஸ்காந்த் ஒரு சிறந்த முன்னுதாரணமாவர்.

இவரை முன்மாதிரியாகக் கொண்டு எமது இளைஞர், யுவதிகள் விளையாட்டுக்களிலும் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

கற்றல் மூலம் மட்டுமல்ல விளையாட்டின் மூலமும் உயரங்களை எட்ட முடியும் என்பதை உணர்த்தியுள்ள வியாஸ்காந்துக்கு மீண்டும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றேன்." – என்றுள்ளது.



பேராசிரியர் சு.வித்தியானந்தன்
நாற்றாண்டு விழா
காலம் : 11.05.2024, 12.05.2024
இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி


INDSRI FERRY
யாழ்
நாகை
சுற்றுலா செல்வோம் சிவகங்கையில்
13/05/24
இல் இருந்து தினசரி சேவை
ரூ 15,000*
இல் இருந்து
• பாரம்பரிய சுற்றுலா
• வணக்கத்தலங்கள்
• அழகிய மலையகம்
மேலும் அனுபவிக்க...
பதிவுகளுக்கு
www.sailindsri.com
Google play
Download on the App Store

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# போதைப் பாவனை

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், வர்த்தகர்கள், பாவனையாளர்களுக்கு எதிரான பொலிஸாரின் 'யுக்திய' நடவடிக்கை முழுமூச்சில் முன்னெடுக்கப்பட்டாலும் - அதில் கணிசமான முன்னேற்றங்கள், சாதகமான அம்சங்கள் பெறுபேறாகப் பெறப்பட்டாலும் - விடயத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதைப் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொள்கின்றன.

வெட்ட வெட்ட முளைக்கும் மரம் போல, போதைப் பொருள் வர்த்தகம் மீண்டும் மீண்டும் சூடு பிடித்துக் கொண்டே இருக்கின்றது. என்ன தீவிர நடவடிக்கை எடுத்தாலும் இவ்விடயத்தில் முன்னேற்றம் 'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலைமையாகவே இருப்பதாக பொலிஸ் தரப்பு வட்டாரங்களே கூறுகின்றன.

போதைப் பொருள் கடத்தல்காரர்களினதும், வர்த்தகர்களின்தும் கட்டமைப்புக்களை சிதறடித்தாலும் கூட, புதிய புதிய தளங்களில் இருந்து புதிய புதிய குழுக்கள் தோற்றம் பெறுகின்றன என்று பொலிஸ் தரப்புகள் விசனம் தெரிவிக்கின்றன.

ஆபத்தும், நெருக்கடியும், சமூகச் சீரழிவும் தரும் இந்த வர்த்தகம் மூலம் கிட்டும் அபரிமிதமான வருமானமே 'கரணம் தப்பினால் மரணம்' என்ற ரகத்தைச் சேர்ந்த இந்த விபரீத வலையமைப்புக்குள் கடத்தல்காரர்களையும் வர்த்தகங்களையும் இழுத்து வீழ்த்துகின்றது என்பது கண்கூடு.

ஆயினும் இவ்வளவு மோசமான பாதிப்பை தரும் போதைப்பொருள் பாவனையில் மயங்கி விழுவதற்கு - 'விளக்கில் வீழும் விட்டில் பூச்சி போல' இந்தச் சேற்றுச் சாகரத்துக்குள் குதிப்பதற்கு - பதின்ம வயதினரும் இளைய சமுதாயத்தினரும் தயாராக இருக்கின்றமை இந்த கடைகெட்ட வலையமைப்பை சிதைத்தழிக்க முடியாமல் இருப்பதற்கான பிரதான இடைஞ்சலாகும்.

ஒரு தடவை இந்தப் போதைப்பொருள் பாவனை என்ற வலைக்குள் விழுந்த நபரை, அதிலிருந்து முற்றாக மீட்டெடுப்பது மணலைக் கயிறாகத் திரிப்பதற்கு ஒப்பானதாகும். மீட்டெடுத்தாலும் கூட இலகுவில் மீண்டும் அந்த சபலத்திற்கு உள்ளாகி அதற்குள் அவர் மூழ்கி விடுவதற்கான வாய்ப்புகளும் அதிகம்.

இப்படி போதைப் பொருள் பாவனைக்கான ஒரு சந்தை - தளம் - தாராளமாக இருக்கும் வரை போதைப்பொருள் கடத்தல்காரர்களும் மற்றவர்களும் நிச்சயம் இருப்பார்கள். தேவைக்கேற்ப புதிது புதிதாகத் தோற்றம் எடுத்துக் கொண்டிருப்பார்கள் அல்லது உருவாகிக் கொண்டிருப்பார்கள்.

போதைப் பொருள் வர்த்தகத்தையும் கடத்தலையும் கட்டுப்படுத்தி முழுமையாக அடக்க வேண்டும் என்றால் அதற்கு முதலில் பிரதானமாக செய்ய வேண்டியது அதன் பாவனையாளர்களை இல்லாமலாக்குவதாகும்.

அப்படி செய்வதற்கு இரண்டு விடயங்களை நாம் நிறைவேற்ற வேண்டி இருக்கும்.

ஒன்று - புதிய போதை வஸ்து பாவனையாளர்கள் உருவாகவும் போதைப் பாவனை அறிமுகமாகவும் இடமளிக்காமல் பார்க்க வேண்டும்.

அடுத்தது - ஏற்கனவே போதைப் பொரு பாவனையாளர்களாகி அதற்கு அடிமையானவர்களை அந்தத் துன்ப சாகரத்திலிருந்து - மயக்க வாழ்வில் இருந்து - முழுமையாக மீட்டெடுக்க வேண்டும்.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் போதைப்பொருளுக்கு அடிமையானோரின் எண்ணிக்கை சுமார் பதினொரு லட்சமாக அதிகரித்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மேலும் போதைப்பொருள் விநியோகத்தை கட்டுப்படுத்துவது போன்றே போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

"கொழும்பு மாவட்டத்தில் சுமார் 256 இடங்களில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது.

"போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக போதைப்பொருள் விற்பனையும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், போதைப்பொருள் வர்த்தகத்தையும் பயன்பாட்டையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன" எனப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.








# சிவகாசி பட்டாசு ஆலை வெடி விபத்து: 6 பெண்கள் உட்பட 10 பேர் உயிரிழப்பு

சிவகாசி அருகே செங்கமலப்பட்டி பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 6 பெண்கள் உட்பட 9 பேர் உயிரிழந்த நிலையில், இடிபாடுகளில் சிக்கி இருந்த மற்றுமொரு தொழிலாளியின் உடல் 10 மணி நேரத்திற்கு பின் மீட்கப்பட்டுள்ளது.

சிவகாசி- செங்கமலப்பட்டி அருகே நாக்பூரில் உள்ள பட்டாசு ஆலையில் 80 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த பட்டாசு ஆலையில் நேற்று பிற்பகல் உராய்வு காரணமாக திடீர் வெடி விபத்து ஏற்பட்டது. தகவலறிந்து வந்த சிவகாசி தீயணைப்புத் துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 7 அறைகள் தரைமட்டமாகின. மேலும் 7 அறைகள் சேதமடைந்தன. இந்த விபத்தில் 6 பெண்கள் உட்பட 9 உயிரிழந்தனர். இதில் ஒரு தொழிலாளியின் உடல் பட்டாசு ஆலையில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் இருந்து மீட்கப்பட்டது. காயமடைந்த 11 பேர் சிவகாசி அரசு மருத்துவமனையில், 3 பேர் மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெடி விபத்தில் ஒரு அறையில் தொடர்ந்து புகை வந்து கொண்டே இருந்ததால் மீட்பு பணியில் சுணக்கம் ஏற்பட்டது. மதியம் 2 மணிக்கு வெடி விபத்து நடந்த நிலையில், ஜே.சி.பி. இயந்திரம் மூலம் கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டு மீட்பு பணிகள் நடந்தன. இரவு 9 மணி அளவில் இடிபாடுகளில் சிக்கி இருந்த தொழிலாளி அழகர்சாமியின் உடல் சிதைந்த நிலையில் மீட்கப்பட்டது. அந்த கட்டிடத்தில் மேலும் இருவர் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்பதால் மீட்பு பணிகள் தொடர்கின்றன.

ரமேஷ் (வயது 31), வீரலட்சுமி (வயது 48), காளீஸ்வரன் (வயது 47), முத்து (வயது 52), ஆவுடையம்மாள் (வயது 75), வசந்தி (வயது 38), ஜெயலட்சுமி (வயது 22), லட்சுமி (வயது 43), விஜயகுமார் (வயது 30), அழகர்சாமி ஆகிய 10 பேர் உயிரிழந்தனர்.

இதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த சிவகாசி அருகே ரிசர்வ் லைன் அய்யம்பட்டியை சேர்ந்த ஆவுடையம்மாள், அவரது மகள் முத்து, மருமகள் பேச்சியம்மாள் ஆகியோர் உயிரிழந்தனர்.

விபத்து நடந்த பட்டாசு ஆலையில் ஆய்வு செய்த விருதுநகர் எஸ்.பி. பெரோஸ்கான் அப்துல்லா கருத்து தெரிவிக்கையில்,

"சிவகாசி செங்கமலப்பட்டியில் வெடி விபத்து தொடர்பாக உரிமையாளர் சரவணன், போர்மேன், மற்றும் மேலாளர் மீது வழக்கு பதிவு செய்யப்பட உள்ளது. இந்த பட்டாசு ஆலை விதிகளை மீறி ஒப்பந்ததாரர் மூலம் செயல்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. குற்றவாளிகளை கைது செய்ய 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. பட்டாசு ஆலை உரிமம் 2026 வரை உள்ளது. தொடர்ந்து விதிமுறைகளை மீறும் பட்டாசு ஆலைகளின் உரிமம் ரத்து செய்யப்படும்." – என்றார்.

இந்த விபத்து தொடர்பாக பட்டாசு ஆலை உரிமையாளர் சரவணன், மேலாளர், போர்மேன் மற்றும் மாலையை லீசுக்கு எடுத்து நடத்தி வந்த முத்துகிருஷ்ணன் ஆகிய 4 பேர் மீது சிவகாசி கிழக்கு பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ராகுல் காந்தி மீது தேர்தல் ஆணையத்தில் இணை அமைச்சர் ராம்தாஸ் முறைப்பாடு



நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு ராகுல் காந்தி தெரிவித்த கருத்துக்கு எதிராக மத்திய அரசின் சமூகநீதித்துறை இணை அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே தேர்தல் ஆணையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

"நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் நாட்டின் அரசமைப்பு சட்டத்தை மாற்றிவிடுவார்கள்" என ராகுல் காந்தி தெரிவித்த கருத்துக்கு எதிராகவே ராம்தாஸ் அத்வாலே இவ்வாறு தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளார்.

அத்துடன், ராகுல் பா.ஜ.க. குறித்து இவ்வாறு பேசுவதை தடுக்க வேண்டும் எனவும், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ராம்தாஸ் அத்வாலே தெரிவித்துள்ளார்.





# ஆயுத உதவிகளை நிறுத்துவோம்: இஸ்ரேலுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

தெற்கு காஸாவின் ரஃபா நகரம் மீது தாக்குதல் நடத்தினால், ஆயுத உதவிகளை நிறுத்துவோம் என இஸ்ரேலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஃபாவுக்குள் இஸ்ரேல் இராணுவம் தரைவழி தாக்குதலை நடத்தினால், அந்த நாட்டுக்கு ஆயுதங்கள் மற்றும் பீரங்கி குண்டுகளை வழங்கப் போவதில்லை என ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

ரஃபாவின் தற்போதைய நிலைமையை தரைப்படை நடவடிக்கையாக அமெரிக்கா வரையறுக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே அமெரிக்க பல்கலைக்கழகங்கள் பலவற்றில் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காஸாவில் தாக்குதல் நடத்தும் இஸ்ரேலுக்கு உதவுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என மாணவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

மாணவர்கள் போராட்டத்தை ஒடுக்க பொலிஸார் களமிறங்கியுள்ளனர். இதனால், மாணவர்கள் ஒடுக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளன.

பாலஸ்தீனத்தின் காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீதான இஸ்ரேலின் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட 34 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.



இந்த தாக்குதலில் வடக்கு மற்றும் மத்திய காஸா பகுதிகள் முற்றிலும் நிர்மூலமாகியுள்ளன.

இதற்கிடையே, லட்சக்கணக்கானோர் தஞ்சம் அடைந்துள்ள தெற்கு காஸாவின் ரஃபா நகரம் மீதும் தாக்குதல் நடத்த இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

இதையடுத்து, ரஃபா எல்லையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள இஸ்ரேல், அங்கு டாங்கிகளை குவித்துள்ளது.

# பிரேசிலில் வரலாறு காணாத கனமழை; 100 பேர் பலி, 130 பேரை காணவில்லை






பிரேசிலில் தொடர்ந்து ஒரு வாரத்திற்கும் மேலாக பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களில் இதுவரை 100 பேர் உயிரிழந்துள்ளனர்.

காணாமற்போயுள்ள 130 பேரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு லட்சம் பேர் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

தெற்கு பிரேசிலில் பெருக்கெடுத்த நதிகளால் அணைகள் உடைப்பெடுத்து குடியிருப்புப் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

ரியோ கிராண்டே டோ சுல் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு வரலாறு காணாத மிக மோசமான இயற்கை பேரிடர் என அதிகாரிகள் விபரித்துள்ளனர்.

ரியோ கிராண்டே டோ சுல் மாநிலத் தலைநகரான Porto Alegre மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் கூட மீட்புக்குழுவினர் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1.3 மில்லியன் மக்கள் வசிக்கும் Porto Alegre நகரம் வெள்ளத்தால் கிட்டத்தட்ட முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் பெய்த மழை மற்றும் வெள்ளத்தால் 904 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டிருப்பதாக பிரேசில் அரசு தெரிவித்துள்ளது.




# முதலைகளின் நடமாட்டம் அம்பாறையில் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ள நிலையில் அதிக எண்ணிக்கையான முதலைகள் நீர் நிலைகளை வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்கின்றன. தற்போது மாவடிப்பள்ளி பாலம், சம்மாந்துறை பகுதி, ஒலுவில் பகுதி, நிந்தவூர், மருதமுனை, பெரிய நீலாவணை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கிட்டங்கி, நாவிதன்வெளி உள்ளிட்ட பகுதிகளை அண்மித்த ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுகின்றமையால் வீதியால் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9 முதல் 4அடி நீளமுடைய முதலைகள் வெளியே வருகின்றன என மக்கள் தெரிவிக்கினறனர்.

மேலும் இம்மாவட்டத்தில் உள்ள களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சறுத்தல் தொடர்ந்து நீடிக்கின்றது. மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள், குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.



மேலும் தற்போது சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பமாகி உள்ளதனால் வயல் நிலங்கள், கால்வாய்கள் அண்டிய பகுதியில் நீருக்காகக் குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளினால் இரையாகுகின்றன. இப்பகுதியில் இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் கட்டாக்காலிகளாக இப்பகுதியில் திரியும் மாடுகளே இம்முதலைகளுக்கு இரையாகுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறதுடன் முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக உரிய இடங்களில் அறிவுறுத்துதல்கள், எச்சரிக்கைப் பலகைகள் உரிய இடங்களில் இதுவரையும் வைக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரியவில்லை. முதலை அபாயம் தெரியாமல் இப்பகுதியில் மக்கள் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.






# காத்தான்குடி வைத்தியசாலைக்கு சவூதி அரேபியாத் தூதுவர் விஜயம்

(எம்.எம்.றம்ஸீன்)

சவூதி அரேபியா தூதுவர் ஹாலித் ஹமூத் அல் கஹ்தானி கடந்த புதன் கிழமை காத்தான்குடி ஆதார வைத்திய சாலைக்கு விஜயம் செய்து சவூதியின் ஒளி இலவச

கண்புரை சத்திர சிகிச்சை முகாமைப் பார்வையிட்டார்.

அவரை காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எஸ்.எம்.ஜாபீர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள், அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் வரவேற்றனர்.

இதன் போது வடமேல் மாகாண ஆளுநர் ஹாபீஸ் நஸீர் அஹமத், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காஸீம், சவூதி அரேபிய மன்னர் சல்மானின் 'நிவாரணம் மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கான மன்னர் மையம்' நிறுவனத்தின் பணிப்பாளர் கண் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் அப்துல் கரீம், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் உட்பட அதிகாரிகள் பலரும் வருகை தந்தனர்.

சவூதி அரேபிய தூதுவருக்கு காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஜாபீர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்வதை தூதுவர் பார்வையிட்டமையுடன் கண் புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வைத்தியசாலையில் தங்கியிருப்பவர்களையும் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.









# மட்டு. தேசியக் கல்விக் கல்லூரியில் இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு தேசியக் கல்விக் கல்லூரியின் பீடாதிபதி த.கணேசரத்தினம் தலைமையில் இரத்ததான நிகழ்வு கல்லூரியின் வளாகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆர்வமாக விரிவுரையாளர்கள், மாணவர்கள் இரத்த தானம் செய்தனர்.

இந்நிகழ்வில் உப பீடாதிபதிகள், விரிவுரை இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் கல்லூரியின் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பிரிவில் உதிரம் குறைந்த அள வில் கையிருப்பு உள்ளதை அறிந்து மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியினால் உதிரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.















# மைத்திரி சுதந்திரக் கட்சியின் தவிசாளராக செயற்படுவதைத் தடுக்கும் உத்தரவு நீடிப்பு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக செயற்படுவதை தடுக்கும் வகையில் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நீடித்து கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் விதான நேற்று உத்தரவிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.



இடைக்கால தடையுத்தரவு தொடர்பான ஆட்சேபனையை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு நீதிமன்றினால் நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் மைத்திரிபால சிறிசேன, சிரேஷ்ட உப தவிசாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, உப தவிசாளர் பைசர் முஸ்தபா ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டமை கட்சியின் யாப்பிற்கு முரணாக அமைந்துள்ளதால் அவர் தவிசாளராக செயற்படுவதற்குத் தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த

# டயானாவின் நாடாளுமன்ற வெற்றிடத்திற்கு பெண் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை

டயானா கமகேவின் நாடாளுமன்ற ஆசன வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை நியமிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியினரால் தேர்தல்கள் ஆணையாளருக்கு நேற்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில், டயானா கமகேவின் நாடாளுமன்ற ஆசன வெற்றிடத்திற்கு பொருத்தமான பெண் ஒருவரை நியமிக்குமாறு பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



வெற்றிடத்திற்கு பொருத்தமான பெண் ஒருவரை நியமிக்குமாறு கோரி பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டாரவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

பெண்களின் அனுபவம், அறிவு மற்றும் எதிர்கால சிந்தனை என்பன சமூகத்திலுள்ள அனைவருக்கும் பயனளிக்கும் வகையிலான கொள்கைகளை வகுப்பதில் பங்களிக்க வேண்டும் எனவும், பயனுள்ள ஜனநாயகத்திற்கு நாடாந்ளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் முக்கியமானது எனவும் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.





# ஆசிய ஒளிபரப்பாளர்கள் சங்க 117 ஆவது நிர்வாக சபை அமர்வு

Asia-Pacific Broadcasting Union எனப்படும் ஆசிய பசுபிக் பிராந்திய ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் 117 ஆவது நிர்வாக சபை அமர்வு இரத்மலானை ஸ்டைன் கலையத்தில் நடைபெற்றது.

நேற்று முற்பகல் ஆரம்பமான இந்த அமர்வில் ஆசிய பசுபிக் பிராந்திய இலத்திரனியல் ஊடகங்களின் பிரதானிகள் கலந்துகொண்டிருந்தனர்.

ஆசிய பசுபிக் பிராந்திய ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹமட் நதீமும் இதில் பங்கேற்றார்.

வருகை தந்திருந்த ஊடக நிறுவன பிரதானிகளை கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின் பிரதம நிறைவேற்றதிகாரி சுனில் கனோஜியா வரவேற்றார்.

ஆசிய பசுபிக் பிராந்திய ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் 117 ஆவது நிர்வாகசபைஅமர்வின்தலைமையுரையை தேசிய புலமைச் சொத்துப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் கீதாஞ்சலி ரணவக்க நிகழ்த்தினார்.

நேற்று முழுவதும் ஸ்டைன் கலையகத்தில் ஊடகத்துறையின் எதிர்காலம் தொடர்பில் ஆசிய பசுபிக் ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் தலைவர்கள் வட்டமேசை கலந்துரையாடல்களை நடத்தினர்.

# அக்ஷய திருதியை நன்நாளில் நல்ல காரியங்கள் செய்வோம்!

நடராஜன் ஹரன்

## இன்று (10) அக்ஷய திருதியை

அக்சயம் என்றால் என்றும் தேயாது, குறையாது, வளர்தல் என்ற பொருளை தருகிறது. அதனால் தான் அக்ஷய திருதியை நாளில் நாம் செய்யும் நற்காரியங்கள் எல்லாம் பன்மடங்கு பெருகும். அதன் பலன்களும் நமக்கு பெருமளவு கிடைக்கும்.

வாங்கும் பொருள்களும் அழியாச் செல்வமாய் வீட்டில் தங்கி நிலைத்திருக்கும் என்பது ஆன்றோர் கருத்து. மகாகவி காளிதாசன் எழுதிய உத்திர காலாமிருதம் என்ற நூலில் திதிகளில் மிகவும் சிறப்பு மிக்கது திருதியை திதி என குறிப்பிடுகிறார்.

எல்லா நலன்களும் அள்ளி வழங்கும் திருதியை நன்னாள் அக்ஷய திருதியை திருநாள் ஆகும்.

ஜோதிட ரீதியாக பார்க்கும் போது நவக்கிரகங்களில் சூரியனை தந்தையாகவும், சந்திரனை தாயாகவும் அழைக்கின்றோம். இவ்விரண்டு கிரகங்களும் ஒரே நாளில் உச்சபலத்துடன் சஞ்சரிக்கும் காலம் தான் "அக்ஷய திருதியை". அதாவது மேஷத்தில் சூரியனும், ரிஷபத்தில் சந்திரனும் இருக்கும் நன்னாள்.பெரியோர் அனைவரையும் வாழ்த்தும் போது சூரிய சந்திரர் போல் நிலைத்து வாழ்க என்று வாழ்த்துவர்.

அதாவது நீண்ட காலம் நிலைத்து வாழ சூரிய, சந்திரனும் வலுப்பெற்றிருப்பது மிக முக்கியம். எனவே தான் அப்படி வாழ்த்துகிறார்கள்.

சூரியன் என்பவர் பிதுர்காரகர், சந்திரன் மாத்ருகாரகர் இவர்கள் இருவரும் பலம் பெற்றும் இருக்கும் நன்னாள் அக்ஷய திருதியை என்பதால் அதில் நாம் மேற்கொள்ளும், பூஜைகளும், தானதர்மங்களும், தர்ப்பணங்களும், தொழில் மற்றும் திருமண நிகழ்வுகளும், பொருள்களை வாங்குதல் என அனைத்தும் பன்மடங்காகும்.

லட்சுமி வாசம் செய்யும் இடம். அஷ்ட ஐஸ்வர்யங்களையும், சகல சௌபாக்கியங்களையும் தரவல்ல லட்சுமி தேவி எங்கெல்லாம் வாசம் செய்கிறாள் எந்த இல்லங்களில் இருக்கிறாள் எந்தப் பொருள்களை விரும்புகிறாள் என்று பார்த்தோமானால் தெய்வ பக்தி, ஆற்றல், துணிவு, பொறுமை, இனிய பேச்சு, பெரியோரை மதித்தல், போன்ற நற்பண்புகள் உள்ளவரிடம் நீங்காது இருப்பாள் என்பது நம்பிக்கை ஆகும். சுத்தமான இடம் சூரிய உதயத்துக்கு முன் எழுந்து வீட்டை சுத்தம் செய்து எப்பொழுதும் தூய்மையாகவும் கோலமிட்டும், தீபமேற்றியும் வழிபாடு செய்கின்றனரோ அங்கே ஸ்ரீ தேவியின் வாசம் நிரந்தரமாக இருக்கும்.

சங்கு, மஞ்சள், குங்குமம், கற்பூர ஜோதி, துளசிச் செடி, வாழை மரம், நெல்லிக்காய், பூரண கும்பம் போன்றவற்றிலும், பசு, யானை போன்றவற்றிலும் திருமகள் நீங்காது இருப்பாள்.

பூஜை செய்வது எப்படி?

வீட்டில் பெண்கள் அதிகாலை எழுந்து குளித்து, குத்துவிளக்கேற்றி, மகாலட்சுமி படம் அல்லது அரிசி நிறைந்த செம்பு, அல்லது நீர் நிறைத்து அதில் வாசனை திரவியங்களான பச்சை கற்பூரம், ஏலம், போட்டு வைத்து வாசனை மலர்களால் தங்களுக்கு தெரிந்த மந்திரம் கூறி பாயசம் நைவேத்தியம் செய்து மகாலட்சுமியை வணங்க வேண்டும்.

சுமங்கலிக்குத் தட்சணை பூஜை செய்யும் போது வீட்டுக்குச் சுமங்கலிகளை அழைத்து முடிந்தவரை தட்சணை வைத்து தோலுரிக்காத மட்டையுடன் கூடிய தேங்காயை வைத்து மஞ்சள், குங்குமம் தந்து



வணங்கினாலே மகாலட்சுமி மகிழ்ந்து நம் இல்லம் வருவாள்.

அன்னதானம் செய்யலாம் இந்த நல்ல நாளில் நாம் பெரியோர்களையும் முன்னோர்களையும் வணங்க வேண்டியது முக்கிய கடமையாகும். அக்ஷய திருதியை தினம் பசித்தோருக்கு உணவு வழங்குதல் இல்லாதவர்களுக்கு உடை கொடுத்தல் ஏழைகளுக்கு நம்மால் இயன்ற உதவியை செய்தல் போன்றவை நம்மை குறைவில்லாத செல்வத்துடனும் நிறைந்த ஆயுளுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வைக்கும். உதவி செய்யுங்கள். இறைவனை வழிபடுவதோடு அன்று செய்யும் தானங்கள் அளப்பரிய புண்ணியத்தைத் தரும்.

குடை, விசிறி, எழுது கோல், அரிசி, தண்ணீர் பாத்திரம், உணவுப் பொருள்கள், வஸ்திரம், பசு இப்படி தங்களால் இயன்ற தானங்களை செய்யலாம். அக்ஷய திருதியை தினத்தை "நல்லுதவி தினமாக" கொண்டாடலாம். இது நம் முன்னோருக்கு செய்யும் நன்றியாகும்.

அவல் நிவேதனம் செய்யலாம். இன்றைய நாளில் கிருஷ்ண பரமாத்மாவுக்கு அவல் படைத்து, பூஜை செய்தால் அஷ்டலட்சுமி கடாட்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. இறைவனுக்குச் செய்யப்படும் நிவேதனம், பூஜை ஆகியவை வளத்தையும் நலத்தையும் தரும். குபேரன் அதிபதியான தினம் ஸ்ரீ குபேர பகவான், ஒரு அக்ஷய திருதியை நன்னாள் அன்று இறைவனை வணங்கித் துதித்தார். அதன் பயனாக இறைவன் இவரை வடதிசைக்கு அதிபதியாக்கி சங்கநிதி, பதுமநிதி, கச்சநிதி, கற்பநிதி, நந்தநிதி, நீலநிதி, மகாநிதி, முகுந்த நிதி, மகாபத்மநிதி என்னும் நவநிதிகளையும் அளித்து அழகாபுரி என்னும் குபேரபுரியை ஆளும் அருளை வழங்கினார். பரசுராமர் அவதார தினம் அக்ஷய திருதியை தினமானது மகாவிஷ்ணுவின் ஆறாவது அவதாரமான பரசுராமரின் பிறந்த நாளாக கொண்டாடப்படுகிறது மணிமேகலைக்கு இந்த நாளில் தான் அக்ஷய பாத்திரம் கிடைத்தது. அதனால் அன்று முதல் மக்களின் பசியைப் போக்குவதையே தன் கடமையாக கொண்டிருந்தாள்.

சந்திரன் சாபம் பெற்று தேய்ந்து போன சந்திரன் அக்ஷய திருதியை தினத்தன்று சாப நிவர்த்தி பெற்று அக்ஷய திரிதியை தினத்திலிருந்து மீண்டும் வளரத் தொடங்கினார்.

இதை வைத்துப் பார்க்கையில் அக்ஷய திரிதியை அன்று செய்யும் காரியங்கள் எல்லாம் வளர்பிறை போல வளரும். எனவே தங்கம் வாங்குவது பழக்கமானது. பொன், பொருள் சேர்க்கை தங்கம், வெள்ளி போன்ற பொருள்கள் சேர வேண்டும் என்றால் அக்ஷய திருதியை நாளில் வாங்கினால் வளமுடைய

தொடர்ச்சி▼

# அக்ஷய திருதியை நன்நாளில் நல்ல காரியங்கள் செய்வோம்!

தொடர்ச்சி▲

வாழ்வைப் பெறலாம் என்பது ஐதீகம்.

அன்று விலையுயர்ந்த பொருள்கள்தான் வாங்க வேண்டும் என்பதில்லை. அன்றைய தினம் ஹோமமம், ஜபம் மற்றும் தானம் செய்வது சிறப்பைத் தரும். தானம் செய்வது சிறப்பு.

தங்கள் பொருளாதார நிலைக்குத் தக்கவாறு வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவது சிறப்பு. குடை, விசிறி, ஆடை, நீர்மோர், பானகம், காலணி, மல்லிகைப் பூ, உத்ராட்சம், புத்தகம், பேனா, பென்சில் போன்ற எழுது பொருள்கள், நோட்டு, தயிர் சாதம், போர்வை அல்லது பாய் போன்ற பதினாறு வகை தானங்களைச் செய்வது பல மடங்கு புண்ணியத்தை அளிக்கும் என்பது நம்பிக்கை.

குலேசன் கதை வெறும் கையுடன் தன் நண்பன் கண்ணனைக் காணச் செல்லக் கூடாது என்றெண்ணி, இருந்த ஒரு பிடி அரிசியை அவலாக்கி, அதனைச் சுத்தமான கிழிசல் துணியில் கட்டிக்கொண்டு சென்றார் குசேலர். ஆர்வமாய் கிருஷ்ணர் அதனைப் பெற்றுக்கொண்டு, அவலை வாயில் இடும்போது அக்ஷய என்றார். செல்வம் பெருகியது நண்பனிடம் விடைபெற்று, தன் இல்லம் திரும்பிய குசேலர், தன் இல்லத்தைக் காணாது தேடினார்.

அது மாளிகையாக மாறிவிட்டிருந்தது. செல்வச் செழிப்புடன் இருந்த மனைவியைக் கண்டு வியந்தார். இந்த வளங்கள் யாவும் கிருஷ்ணர் கூறிய அக்ஷய என்ற சொல்லால் கிடைத்தது. எனவே நாமும் நம்மால் முடிந்த அளவு அக்ஷய திருதியை தினத்தில் தானம் செய்து இவ் உலகிலும் சொர்க்க உலகிலும் வளம் பெருவோம்.

# ரூ.5 கோடி பெறுமதி போதைப்பொருளை கடத்தி வந்தவர் கட்டுநாயக்காவில் கைது!

ஐந்து கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய போதைப்பொருளை தாய்லாந்திலிருந்து நாட்டிற்குக் கொண்டுவந்த ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப் பட்டுள்ளார்.

விமான நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 5 கிலோ 278 கிராம் எடையுடைய 'குஷ்' போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹோமாகம பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபர், தமது பயணப் பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த நிலையில் இந்தப் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. இதனிடையே, சட்ட விரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப் பட்ட ஒரு தொகை சிகரெட்களுடன் ஒருவர் கட்டு நாயக்க விமான நிலையத் தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிற்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக் கையிலேயே சந்தேகநபர் கைது செய் யப்பட்டுள்ளார்.

கொழும்பு – நாகலகம வீதி பகுதி யைச் சேர்ந்த 29 வயதான சந்தேக நபரிடமிருந்து, 6 லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான சிகரெட்கள் கைப் பற்றப்பட்டுள்ளன. இவை டுபாயிலிருந்து நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

# மின் கட்டண குறைப்பு முன்மொழிவுகளை மின்சார சபை இதுவரை வழங்கவில்லை!

## பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவிப்பு




மின் கட்டணத்தை குறைப்பது தொடர் பான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை இதுவரை பொதுப் பயன் பாட்டு ஆணைக்குழுவிடம் வழங்க வில்லை என அதன் தலைவர் பேராசிரி யர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித் துள்ளார். இது தொடர்பான முன்மொழி வுகள் இம்மாதம் முதலாம் திகதி ஆணைக் குழு விடம் வழங்கப்படவிருந்தன.

எவ்வாறாயினும் மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு அமைய இன்று வரை அந்த காலத்தை நீடிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவ டிக்கை எடுத்துள்ளது.

இதன்படி இன்று முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

# 24 லட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசி

இலங்கையிலுள்ள 24 லட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்க தீர்மானிக் கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்திற்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை அண்மைக்காலமாக அரசாங்கத்தினால் இலவசமாக விநியோகிக்கப்படும் அரிசி தரமற்றது எனவும், அவை பணத்திற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தொடர்ந்தும் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில், மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.





# ரஷ்ய - உக்ரைன் போரில் 8 இலங்கையர்கள் பலி!

ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து கொள்வதற்காக மனித கடத்தல் காரர்களால் அனுப்பப்பட்ட இலங்கை யர்கள் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் முன்னாள் இராணுவ வீரர்கள் என்பதுடன் இவர்களில் ரஷ்யாவில் 6 பேரும் உக்ரைனில் 2 பேரும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இதுவரை 23 இலங் கையர்கள் உக்ரைனுக்கு அனுப்பப் பட்டுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# 37 மதுபானசாலைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மொத்தமாக 37 புதிய மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் மதுவரித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

அவற்றில் 16 அனுமதிப்பத்திரங்கள் சிறப்பு அங் காடிகளுக்காக வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர முன்வைத்த கேள்விக்கு பதிலளித்து கருத்துரைத்த போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.



# மண்வாசனை கமழும் அகிலன் கவிதைகள்...!



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

எண்பதுகளின் பிற்பகுதியில் எழுச்சிமிகு கவிதைகளை படைத்த ஈழத்தின் இளம் கவிஞர்களில் அகிலன் திருச்செல்வம் குறிப்பிடத்தக்கவர். ஈழத்தின் பன்முக ஆளுமைமிக்க இளம் கவிஞனான அகிலன் திருச் செல்வம் 1989 மே மாதம் 10 ஆம் நாள் இந்த மண்ணை விட்டு மறைந்தார். அவரது நினைவாக இந்தக் கட்டுரை

அகிலன் திருச்செல்வம் கவிதைகள் போரின் வலியைச் சுமந்த வரிகளாய் பரிணமத்தன. அகிலனின் முதலாவது ஆண்டு நினைவாக 1990 இல் ஈழத்தில் வெளிவந்த “மரணம் வாழ்வின் முடிவல்ல” என்ற கவிதைத் தொகுப்பானது ஈழவாழ்வின் நிதர்சனத்தை மெய்ப்பிக்கும் கவிதைகளாகும்.

பல ஆளுமைகளின் திறமைசாலியான அகிலன் திருச்செல்வத்தின் கவிதைகள் அன்றைய காலகட்டத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் தமிழரின் போரின் வலியை சுமந்த வரிகளாய் வரலாற்றின் பக்கங்களில் மையங்கொள்கிறது. 1989 மே பத்தாம் நாள் தனது பத்தொன்பது வயதில் ஈழ மண்ணில் விதையாக்கப்பட்டார்.

சோகத்தின் பாதைகளே
தேசத்தின் வரைபடமாய்
பரிணமித்தன...
குருதியின் குருத்துக்கள்
விழியோரத்து சுவடுகளாய்
உறைந்தன...
தினமும் துயரத்தின்
சிறகுகளால் துடைக்கப்பட்ட
நாள்கள்
இறந்து கொண்டிருந்தன!!

கொந்தளிக்கும் கடலின் நடுவே இலங்கைத் தீவு. போர்ப் புயலின் நடுவே ஈழம். சுழன்றடிக்கும் புயலிலும், அலையோடு அலை மோதுவது போல் துக்க உணர்ச்சியிலும் கோப உணர்ச்சியிலும் போரிட எழுந்து நின்றனர் ஈழத்துக் கவிஞர்கள். அந்த இளைஞர்களின் அச்சமின்மைக்கும், தன்னம்பிக்கைக்கும் சான்றாக விளங்கும் கவிதைகளாக அகிலனின் வரிகள் சூளுரைக்கின்றன.




பிறந்து...
வாழ்ந்து...
எழுதப் படாத நிகழ்வாய்
பேசப்படாத மொழியாய்
மௌனமாய்...

இங்கு
இழப்பொன்று நிகழ்ந்தது...
எதை இழந்தோம்
மண்ணை...
மக்களை...
காற்றை.....
கடலலையை...
மூச்சை..........
முழுவதையும் இழந்தோம்.....

தமிழ் வாலிபரை எதிர்கால அபாயமாக எண்ணி பேரினவாத ராணுவம் கொன்றொழித்த போதிலும், எதிரியின் பிணந் தின்னும் துப்பாக்கியைவிட வலிமை வாய்ந்ததாக எழுதுகோலை இயக்குகிறான் அகிலன்.

மக்களுக்காய் மரணிப்பதையிட்டு
நான் மகிழ்ச்சியடைகிறேன்!
அதனால் என் துப்பாக்கி பறிபோவதையிட்டே
நான் வருத்தமடைகிறேன்...
ஏனெனில் என் குழந்தைக்கு
அது மிகவும் அவசியம்...
நாம் எதை இழக்கவில்லை
நாம் எதை இழக்கவில்லை....

அகிலனின் கவிதை என்பது மிகவும் நுணுக்கமான ஒரு பொறி, அதன் உருவ அமைப்பு எளிமையாகத் தோன்றிய போதிலும், பலரை அவன் கவிதைகளில் ஈர்த்துள்ளது என்பதே உண்மை.

அகிலனின் கவிதையின் அடிகள் ஒவ்வொன்றுமே வீரியம் மிக்கனவாய் அமைந்தன. சொல்லாட்சியும் படிமவார்ப்பும் அவன் கவிதையின் சக்திப் பயப்புக்கான மூலவளங்களாயின.

நம்மவர்கள் அகிம்சா வாதத்தில்
அரசமைப்பில் நம்பிக்கை
இழந்தனர்...
மானுட விடுதலைக்கு
தோள் கொடுத்தது
புரட்சிப் பூக்கள்...
துப்பாக்கிச் செடியில்
மாணவ பேரவை பூக்கள்
காலமென்னும் காற்று
கைகொட்டி நின்றது!!

சொல்லாட்சியையும், படிம வார்ப்பையும் அகிலனின் வரிகளில் அவதானிக்கலாம். கவிதையின் கட்டமைப்புக்கு அமைவாக முன் அனுபவ வரலாற்று அறிவுத் தகவல்களையும் நாம் இங்கு காணலாம்.

அகிலனின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தில் வெளிவந்த “மரணம் வாழ்வின் முடிவல்ல” என்ற கவிதைத் தொகுப்பானது எம் வாழ்வின் நிதர்சனத்தை மெய்ப்பிக்கும் கவிதைகளாகும் .

தொடர்ச்சி▼

# மண்வாசனை கமழும் அகிலன் கவிதைகள்...!

தொடர்ச்சி▲

எண்பத்து மூன்றில்
திருநெல்வேலி மண்ணில்
சிதறின சதைகள்...
தீவு எங்கும்
ஓடின குருதி...
தாலி இருந்து
தனயனை இழந்து
எம் தமிழ்ப் பெண்கள்
தன்னம்பிக்கை முதலாய்
தாய் நாடு அடைந்தனர்...!

மனம் கசியும் கண்ணீர்த்துளிகளே இவ்வரிகள். ஆனால் அதன் பின் எழுவது அபசுரமல்ல. "நமது தலைமுறை நிமிர்ந்து நிற்கட்டும்" என்று அறை கூவுகிறான் அந்தப் போராளிக் கவிஞனான அகிலன்.

தொடர்ந்து வரும்
சோகத்தின் பயணத்தில்
இறுதியில் இணைந்தது
இனிய வடமராட்சி...

மீன்கள் துள்ளும்
கடலலை ஓரம்...
பேய்கள் குவியும்!
பிணங்களை உருட்டும்..!

சோகம் நிறைந்த
பாடங்கள் முடிவில்
மக்கள் என்றும்
வரலாறு படைப்பாளர்...!

1990 இல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட "மரணம் வாழ்வின் முடிவல்ல" கவிதை தொகுப்பில் அடங்கிய அனைத்தும் எரிதழல் கவிதைகளாகும். படிப்பவர் நெஞ்சில் உணர்ச்சிப் புயலை எழுப்புகின்றன. ஈழத்தமிழரின் மானுட வாழ்வை ஒத்தையாய் தனித்து நின்று பார்க்காமல், போராடும் மக்கள் மத்தியில் நின்று, அவர்களின் துக்கங்களில் பங்கேற்று, அவர்களின் உறுதியும் தளராத நம்பிக்கை தரும் கவிதைகளாக ஒவ்வொரு வரியிலும் ஒளிர்கிறது.

அகிலன் திருச்செல்வம் கூறிய கவிதை வரிகளைப் போல அவரின் இளம் வாழ்வும் ஈழ மண்ணுக்காக ஆகுதியாக்கப்பட்டுவிட்டது. அகிலன் கூறியது போல அவன் மரணம் வாழ்வின் முடிவல்ல!!



# தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக ரூ.1,200 வழங்க தோட்ட நிறுவனங்கள் இணக்கம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக 1,200 ரூபாவை வழங்குவதற்குப் பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன எனத் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

1,200 ரூபா வரை சம்பளத்தை அதிகரிப்பதற்கு தயார் எனவும் எனினும், அதனை உற்பத்திக்கு அமைவான சம்பளமாக அமையாத, அடிப்படை சம்பளமாக வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கவில்லை என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், சம்பள அதிகரிப்பு தொடர்பில் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு மே மாதம் 15 ஆம் திகதி வரை பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு கால அவகாசம் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அவர்களின் எதிர்ப்பிற்கு அமைய, 15 ஆம் திகதியின் பின்னர் மீண்டுமொரு வர்த்தமானியை வெளியிட அரசாங்கத்திற்கு நேரிடும் என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

1,200 ரூபா வரை அடிப்படை சம்பளத்தை அதிகரிப்பதற்கும் மேலதிகமாக பறிக்கும் கொழுந்திற்கு விலையை நிர்ணயிப்பது தொடர்பிலும் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் அரசாங்கமும் அமைச்சரும் தோல்வியடைந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் ஏமாற்றியுள்ளதாகவும் எதிர்க்கட்சியினர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினர்.




# சவால்களை ஏற்று ஜனாதிபதி செயல்பட்டமையாலேயே இரண்டு வருடங்களில் நாடு ஸ்திர நிலையை அடைந்தது

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

"நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சி யடைந்த போது ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க சவால்களுக்குப் பயந்து ஓடாமல், அதனை வெற்றிகரமாக எதிர் கொண்டமையால் இரண்டு வருடங் களின் பின்னர் நாட்டை ஸ்திரப்படுத்த முடிந்துள்ளது."

– இவ்வாறு ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிக மான முதலீட்டில் கடுவெல, மாபிம பிர தேசத்தில் நிறுவப்பட்ட லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் புதிய எரிவாயு நிரப்பு நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற் றது. இந்த நிகழ்வில் சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நிலையான அபிவிருத்தி மற்றும் பொதுமக்களின் தேவைகளை அதிகரிக் கும் நோக்கில், ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த எரிவாயு நிரப்பு நிலையத்தை லிட்ரோ நிறுவனம் நிர்மாணித்துள்ளது. இதன் மூலம் எரிவாயு சிலிண்டர் கொள்ளளவை 180 000 இனால் அதிகரிக்க நிறுவனம் எதிர்பார்த்துள்ளது. தினமும் 60,000 காஸ் சிலிண்டர்களை விநியோகிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

லிட்ரோ நிறுவனத்தினால் இவ்வளவு நவீன தொழில்நுட்பத்துடனான நிலைய மொன்றை உருவாக்க முடியும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கற் பனை செய்து பார்க்க முடியாது. லிட்ரோ நிறுவனத்திற்கு ஒரு மோசமான கால கட்டம் இருந்தது. காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறின. கேஸ் கொள்வனவு செய்வதற்கு மக்கள் வரிசையில் நின்றனர். அரசாங்கத்திடம் அந்நியச் செலாவணி இருக்கவில்லை. அரசிடம் பணமும் இருக்கவில்லை. இது போன்ற ஒரு கடினமான காலத்தை நாம் கடந்து வந்திருக்கிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான தலை மைத்துவத்தினால் வெளிநாடுகளில் இருந்து ஆதரவு கிடைத்தது.

முன்னர் லிட்ரோ நிறுவனம் அரசுக்கு சுமையாக இருந்தது. ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நிறுவனத்தின் முகாமைத்து வத்தை மாற்றியமைத்தமையால் இன்று இந்நிறுவனம் இந்த நிலைக்கு வந் துள்ளது. லிட்ரோ நிறுவனத்தின் வெற்றி யினால் உலக வங்கியிடமிருந்து பெறப் பட்ட 26 பில்லியன் ரூபா கடன் தொகையை ஆறு மாதங்களுக்குள் செலுத்த முடிந்தது. கடந்த வருடம் லிட்ரோ நிறுவனம் 3 பில்லியன் ரூபாவை அரசாங்கத்திற்கு வழங்கி யுள்ளது.

தற்போது மக்கள் வரிசையில் நிற் காமல் எரிவாயுவை பெற்றுக் கொள் கின்றனர். மிகவும் சவாலான காலகட் டத்தின் பின்னர் லிட்ரோ நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்லும் நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் உட்பட பணிப் பாளர் சபை, பணியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு எமது நன்றிக ளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசு நிறுவனங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். அரச தொழில் முயற்சிகள் அரசுக்கு சுமையாக உள் ளன.

லிட்ரோ நிறுவனமும் நஷ்டத்தில் இயங்கி வந்தது. ஆனால் இன்று அது லாபகரமாக மாறிவிட்டது. ஒரு நாடாக, நாம் வேகமாக முன்னேற வேண்டும். நாடு வீழ்ச்சியடைந்த போது மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்தது.

சகல புள்ளிவிவரங்களையும் அவதா னித்தால், ஒரு நாடாக நல்ல பொரு ளாதார வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இரண்டு வருட பொருளாதார நெருக் கடிக்குப் பிறகு, முதன்மைக் கணக்கு இருப்பு உபரியாக மாறியுள்ளது. ரூபா யின் பெறுமதி வேகமாக வலுவடைந்து வருகிறது. நாடு நிலையானது மட்டு மல்ல, பணவீக்கமும் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எதிர்காலத்தில் மேலும் சவால்கள் உள்ளன.

அந்நியச் செலாவணியை மேலும் அதிகரிக்க சுற்றுலாத் திட்டங்களை மேலும் மேம்படுத்த வேண்டும். நமது துறைமுகங்களை விநியோக மைய மாக உருவாக்க வேண்டும். உற்பத்தித் தொழில்கள் மூலம் நாம் மேலும் முன் னேற முடியும். மின்சாரத்தைக் கூட ஏற்றுமதி செய்யலாம். விவசாயத்து றையை முன்னேற்றலாம். இதுபோன்ற பல வாய்ப்புகள் உள்ளன. இதற்கு தேவையான மனித வளமும் நம்மிடம் உள்ளது.

லிட்ரோ நவீன உலகத்திற்கு ஏற்ற வாறு செயற்படுகிறது. ஏனைய நிறுவ னங்களும் இந்த வழியில் செயல் படலாம். அரசின் திட்டம் இருந்தாலும் இதற்கு அனைவரின் ஆதரவும் தேவை. நாட்டை மீட்க கடுமையான முடிவுகளை எடுத்தோம். எல்லோரும் பிரச்சினை களை எதிர்கொண்டனர். பிரச்சினை களை விட்டு ஓடாததால் நாடு இன்று நல்லதொரு நிலையை எட்டியுள்ளது. குறைகள் இருப்பின் ஆராய்ந்து சீர் செய்ய வேண்டும்." – என்றார்.

இந்த நிகழ்வில் லிட்ரோ நிறுவ னத்தின் தலைவர் முதித பீரிஸ், பணிப் பாளர் சபை, ஊழியர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




# இன்றைய ராசி பலன்கள் - 10.05.2024




இன்று உங்கள் விருப்பத்திற்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்ததபோல உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாகக் காணப்படுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பணஇழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். காரணமேயில்லாமல் அவர்கள் உங்கள் மீது பழி போடுவார்கள். இது உங்கள் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற தவறான புரிந்துணர்வு கொள்வீர்கள். இதனை மாற்றிக் கொள்வது சிறந்தது.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும் அதிர்ஷ்டமும் குறைந்து காணப்படும். எனவே உங்கள் செலவுகளை முறையாக திட்டமிட்டு செய்யவும்.

அதிக வெப்பம் காரணமாக தோலில் எரிச்சல் ஏற்படும். இதனால் அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் நல்ல மன நிலையில் காணப்படுவீர்கள். நல்லது நடக்கும் என்ற உணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இந்தப் போக்கு உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களுக்கு ஊக்கத்தொகை போன்ற வகையில் கூடுதல் பணம் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.




இன்று அமைதியின்மை காரணமாக உங்களிடம் உறுதியும் தைரியமும் குறைந்து காணப்படும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்கள் இலக்குகளை அடிய நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் பணயில் சிக்கல்கள் காணப்படும் என்பதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். இது மேலதிகாரிகளின் கவனத்துக்குச் செல்ல வாய்ப்பிருப்பதால் கவனம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனால் இடைவெளி உண்டாகும். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணாப்படும். பணம் இன்று குறைவாக இருப்பதால் நீங்கள் முறையாகத் திட்டமிட இயலாது.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். எனவே இன்று சகஜமாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்களிடம் நிறைய எதிர்பார்ப்பார்கள். என்றாலும் சில கட்டுப்பாடுகள் காரணமாக நீங்கள் உங்கள் இலட்சியத்தை அடைய இயலாது.

உங்கள் துணை உங்கள் அன்பை சரியாக புரிந்து கொள்ள மாட்டார். நீங்கள் உங்கள் அன்பில் நேர்மையாக இருந்தாலும் அதனை உங்கள் துணை சரியாக புரிந்து கொள்ள மாட்டார்.

இன்று உங்களால் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. எனவே சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கடன் வாங்குவதற்கான சாத்தியம் உள்ளது.




இன்றைய நாள் கடினமாக இருக்கும். உங்களிடம் பதட்டம் காணப்படும். பிரார்தனை மற்றும் வழிபாடு சிறந்த பயனளிக்கும்.

பணிகள் அதிகமாகவும் நேரம் குறைவாகவும் காணப்படும். இதனால் உங்களுக்கு பதற்றம் உண்டாகும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தேவையற்ற சண்டைகள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் தடுக்க அவருடன் அனுசரித்து செல்வது சிறந்தது.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் லட்சியம் அவ்வளவு எளிதானதல்ல. பணம் வந்தாலும் தேவையற்ற செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை பராமரிக்க இயலாது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.05.2024




நீங்கள் இன்று விரைந்து பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் மேற்கொள்வீர்கள். உங்கள் இலக்குகளை அடைந்து திருப்தியடைவீர்கள்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். இதன் மூலம் பணியில் சாதிப்பீர்கள்.

இன்று பக்குவமும் புரிந்துணர்வும் கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் முயற்சி காரணமாக இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

பக்தியும் பிரார்த்தனையும் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும்.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சில பிரச்சினைகளை சந்திக்க நேரும் என்பதால் பொறுமையும் மன உறுதியும் அவசியம். சிக்கலான சூழ்நிலையை சமாளிக்க நேர்மறையான எண்ணங்கள் அவசியம்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் நல்லுறவு பராமரிக்க முடியாது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறிது குழப்பம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்ல மன நிலையும் புரிந்துணர்வும் காணப்படும்.

இன்றி நிதிநிலை சாதகமாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவுகள் காரணமாக நீங்கள் கடன் வாங்க நேரலாம்.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப்படுவார்கள்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.










## உலகக் கிண்ண இருபது-20 தொடர்:

# இலங்கை அணியில் யாழ். வீரர் வியாஸ்காந்த்!

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இருபது- 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணி நேற்று (09) அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், யாழ். வீரரான விஜயகாந்த் வியாஸ்காந்த் மேலதிக வீரராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணிக்கான 15 பேர் கொண்ட குழாமின் தலைவராக வனிந்து ஹசரங்க பெயரிடப்பட்டுள்ளார். உபதலைவராக சரித் அசலங்க பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த அணியில் மூத்த வீரரான அஞ்சலோ மத்யூஸ் இடம்பிடித்துள்ளார்.

அறிவிக்கப்பட்ட இலங்கை அணி வீரர்களின் விபரம் வருமாறு–

வனிது ஹசரங்க (அணித்தலைவர்), சரித் அசலங்க (அணி உப தலைவர்), குசல் மெண்டிஸ், பெதும் நிஸங்க, சதீர சமரவிக்ரம, அஞ்சலோ மத்யூஸ், கமிது மெண்டிஸ், தஷ்ன் சானக்க, தனஞ்சய டி சில்வா, மகேஷ் தீக்ஷனா, துனித் வெள்ளாகே, துஷ்மந்த சமிர, நுவன் துஷாரா, மதிஷ பத்திரன, தில்ஷான் மதுஷங்க.

மேலதிக அணி வீரர்கள் : அசித பெர்னாண்டோ, விஜயகாந்த் வியாஸ்காந்த், பானுக ராஜபக்ஷ, ஜனித் லியனகே.

மேலதிக வீரராகத் தெரிவாகியுள்ள யாழ். வீரரான விஜயகாந்த் வியாஸ்காந்த், ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் ஹைதராபாத் அணியின் பந்துவீச்சாளராகக் களமிறக்கப்பட்ட திறமையை வெளிப்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Sri Lanka Cricket